*கவனிக்க.-2023.03.03 ஆந் திகதிய 2323 ஆம் இலக்க, வர்த்தமானியின் பகுதி IV (அ) (தமிழ் மொழிமூலம்) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2323 - 2023 මාර්තු මස 10 වැනි සිකුරාදා - 2023.03.10

*2323 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 388 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 390 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2023, மாச்சு மாதம் 31ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, மாச்சு மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்
## ப்ளக்வுட் ஹோல்டின்ஸ் லங்கா (பிறைவட்) லிமிட்டட் முன்மொழியப்பட்ட மூலதன குறைப்பு

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் ப்ளக்வுட் ஹோல்டின்ஸ் லங்கா ( பிறைவட்) லிமிட்டட் கம்பனியானது அதனது 1,309,445 சாதாரண பங்குகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட மூலதனமான ரூ.13,094,450.00 ஆனது 1,309,445 சாதாரண பங்குகளால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. ரூ. 13,094,450.00 மூலதனமாகக் குறைப்பதற்கான ப்ளக்வுட் ஹோல்டின்ஸ் லங்கா (பிறைவட்) லிமிட்டட் பணிப்பாளர் சபையின் தீர்மானம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 144 ஆம் பிரிவுக்கமைய விசேட தீர்மானத்தின் மூலம் அதற்கான அங்கீகாரத்தை நிறுவனம் அதன் ஏக பங்குதாரர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும்.*

எம்.என். எசொசியேட்ஸ் மெனேஜ்மன்ட் சர்விஸஸ் (பிறைவட்) லிமிடட்,
செயலாளர்.

51, மூன்றாம் ஒழுங்கை,
கட்டுகொடை, காலி

03- 107

---

## த ஸ்டான்டர்ட் கிரெடிட் ஃபினான்ஸ் லிமிட்டட் கம்பனியின் பதிவு இல.- PB 123

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்ட பிரிவு 346(1) இன் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்*

*கம்பனியின் பெயர்:* த ஸ்டான்டர்ட் கிரெடிட் ஃபினான்ஸ் லிமிட்டட்

*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.277, யூனியன் பிளேஸ், கொழும்பு 2

*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)

*வழக்கு இல.:* CHC 34/ 2020/CO

*கம்பனி கலைப்பாளர் பெயர்:* Gerard Jeevananthan David

*முகவரி:* Liquidator
C/o SJMS Associates
Level 3, No.11, Castle Lane,
Colombo 4.

*நியமனத் திகதி: 2023.02.08*

03- 120/ 1

## த ஸ்டான்டர்ட் கிரெடிட் ஃபினான்ஸ் லிமிட்டட் கம்பனியின் பதிவு இல.- PB 123

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனி சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழான கம்பனி கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்*

*கம்பனியின் பெயர்:* த ஸ்டான்டர்ட் கிரெடிட் ஃபினான்ஸ் லிமிட்டட்

*பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி:* இல.277, யூனியன் பிளேஸ், கொழும்பு 2

*நீதிமன்றம்:* வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)

*வழக்கு இல.:* CHC 34/ 2020/CO

*நீதிமன்ற கட்டளைத் திகதி:* 2023.02.08

*கோரிக்கை தாக்கல் செய்த திகதி:* 2020.10.07

*கம்பனி கலைப்பாளர் பெயர்:* Gerard Jeevananthan David

*முகவரி:* Liquidator
C/o SJMS Associates
Level 3, No.11, Castle Lane,
Colombo 4.

03- 120/ 2

---

## சியட் களனி இன்டர்நசனல் டயர்ஸ் ( பிறைவட்) லிமிட்டெட் உடன் சியட் களனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்டின் கூட்டிணைவு

## பொது அறிவித்தல்

*கம்பனிச் சட்டத்தின் 242(2) ஆம் பிரிவு விதிகளில் உள்ளவாறு சியட் களனி இன்டர்நசனல் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டெட் ( கம்பனி பதிவு இல. PV 4488) உடன் சியன் களனி ரேடியல்ஸ் ( பிறைவட்) லிமிட்டெட் ( கம்பனி பதிவு இல. PV 784) இன் முன்மொழியப்பட்ட கூட்டிணைவு ஒன்றின் ( சட்டம்)*

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 242 ஆவது பிரிவின் (3) (b) உப பிரிவின் விதிகளுக்கு அமைவான பொது அறிவித்தல்*

*கம்பனிச் சட்டத்தின் 242(2) ஆம் பிரிவு விதிகளில் உள்ளவாறு சியட் களனி இன்டர்நசனல் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டெட் உடன் சியட் களனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டெட் நிறுவனத்தை கூட்டிணைப்பதற்கு சியட் களனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபை தீர்க்கப்படவிருப்பதோடு சியட் களனி இன்டர்நசனல் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்டின் முழு உரிமை பெற்ற துணை*

நிறுவனம் ஒன்றாக சியட் களனி ரேடியல்ஸ் ( பிறைவட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர்கள் சபை 2023, மாச்சு 20 ஆந் திகதி கூடவுள்ளது. இதன் மூலம் சியட் களனி இன்டர்னசனல் டயர்ஸ் ( பிறைவட்) லிமிட்டெட் தொடர்ந்து செயற்படும் என்பதோடு சியட் களனி ரேடியல்ஸ் ( பிறைவட்) லிமிட்டெட் இருப்பு நிலையில் இருந்து நீக்கப்படும்.

எனவே இந்த அறிவித்தல் திகதியில் இருந்து 20 நாட்களுக்கு மேற்படாத ஒரு தினத்தில் கூறப்பட்ட சட்டத்தின் 243 ஆவது பிரிவில் நிர்ணயிக்கப்பட்ட ஆவணங்களுடன் சேர்த்து கூட்டிணைவு முன்மொழிவை பதிவு செய்வதற்காக கம்பனி பதிவாளர் நாயகத்திற்கு சியட் களனி ரேடியல்ஸ் ( பிறைவட்) லிமிட்டெட் மற்றும் சியட் களனி இன்டர்நசனல் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்டினால் பதிவு செய்வதற்கு இணங்க சட்டத்தின் 242(2) ஆவது பிரிவின் விதிகளில் உள்ளவாறு கூட்டிணைவு சான்றிதழ் கம்பனிப் பதிவாளர் நாயகத்தினால் வெளியிடப்படும் என்பதோடு அந்தக் கூட்டிணைவு அமுலுக்கு வரும்.

சியட் களனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டெட் (நிறுவனம்) மற்றும் சியட் களனி இன்டர்நசனல் டயர்ஸ் (பிறைவட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபை மூலம் கூட்டிணைவை அங்கீகரிக்கும் தீர்மானங்களை அமைப்பதற்கு கருதப்படும் சட்டத்தின் 242(4) பிரிவு விதிகளில் உள்ள கூட்டிணைவு முன்மொழிவின் பிரதிகள் கொழும்பு 07, கிரகரிஸ் வீதி, இல. 59 இல் பீ.ஆர். கோபரேட் (பிறைவெட்) லிமிட்டெட், நிறுவன செயலாளர்கள் அலுவலகத்தில் சாதாரண வர்த்தக நேரங்களில் எந்த ஒரு பங்குதாரர் அல்லது நிறுவனத்தின் கடனளித்தவர் அல்லது நிறுவனத்திற்கு கடப்பாடு பெற்ற எந்த ஒருவருக்கும் பரீட்சிப்பதற்காக வைக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் பங்குதாரர் அல்லது கடனளித்தவர் அல்லது நிறுவனத்திற்கு கடப்பாடு பெற்ற எந்த ஒருவருக்கும் நிறுவனத்திற்கு கோரிக்கை ஒன்றை மேற்கொள்வதன் மூலம் கூட்டிணைவு முன்மொழிவின் பிரதி ஒன்றை கட்டணம் இன்றி பெற்றுக் கொள்ள உரிமை உள்ளது.

சியட் களனி ரேடியல்ஸ் (பிறைவட்) லிமிட்டெட் மற்றும் சியட் களனி இன்டர்நசனல் டயர்ஸ் ( பிறைவட்) லிமிட்டெட்டின் பணிப்பாளர்களின் ஆணைப்படி,

பீ.ஆர்.கோபரேட் (பிறைவட்) லிமிட்டட்,
செயலாளர்கள்.

2023, பெப்புருவரி 17.

03-128

### அறிவித்தல்

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் அறிவித்தல்

மாஸ் இன்வெஸ்ட்மண்ட்ஸ் ( பிறைவட்) லிமிட்டட் (கம்பனி பதிவிலக்கம் பீவீ 11488) ஆனது பதிவு செய்யப்பட்ட முகவரியாக இலக்கம் 199, கடுவல வீதி, பத்தரமுல்ல (அஞ்சல் குறியீடு: 10640) கொண்டுள்ளதோடு 2007ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் பகிரங்க அறிவித்தலுக்கு ஏற்ப அதன் கூறப்பட்ட மூலதனத்தை இலங்கை ரூபாய் ஆறு பில்லியன் அறுநூற்று எண்பத்தாறு மில்லியன் எழுநூ றாயிரத்து ஐம்பது (LKR 6,686, 700, 050) இலிருந்து இலங்கை ரூபா ஒரு பில்லியன் அறுநூற்று எழுபத்தி எட்டு மில்லியன் தொள்ளாயிரத்து எண்பத்து எட்டாயிரத்து ஐந்நூற்று எண்பத்து இரண்டு (LKR1,678,988,582) ஆக குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோபரேட் சேர்விசஸ் (பிறைவட்)
லிமிட்டட்,
செயலாளர்கள்.
மாஸ் இன்வெஸ்ட்ண்ட்ஸ் (பிறைவேட்)
லிமிட்டட்.

03- 158

---

### அறிவித்தல்

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் அறிவித்தல்

மாஸ் பிரேன்ட்ஸ் ஹோல்டிங்ஸ் ( பிறைவட்) லிமிட்டட் (கம்பனி பதிவிலக்கம் பீவீ 111838) ஆனது பதிவு செய்யப்பட்ட முகவரியாக இலக்கம் 199, கடுவல வீதி, பத்தரமுல்ல(அஞ்சல் குறியீடு: 10640) கொண்டுள்ளதோடு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 59(2) ஆம் பிரிவின் பிரகாரம் வழங்கப்படும் பகிரங்க அறிவித்தலிற்கு ஏற்ப அதன் கூறப்பட்ட மூலதனத்தை இலங்கை ரூபா ஐந்து பில்லியன் ஐந்நூற்று நாற்பத்து நான்கு மில்லியன் எழுநூற்று நாற்பத்தி ஓராயிரத்து தொள்ளாயிரத்து பத்து (LKR 5,544, 741, 910) இலிருந்து இலங்கை ரூபா நூற்று அறுபத்து மூன்று மில்லியன் தொள்ளாயிரத்து தொண்ணூற்று மூவாயிரத்து அறுநூற்று ஐம்பத்தொன்றாக (LKR163,993, 651) ஆக குறைப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோபரேட் சேர்விசஸ் (பிறைவட்)
லிமிட்டட்,
மாஸ் பிரேன்ட்ஸ் ஹோல்டிங்ஸ் (பிறைவட்) லிமிட்டட்
செயலாளர்கள்.

03- 159

### அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்தல்

217 Morningside Avenue, Scarborough, Ontario, Canada, AM1E3E4 இல் வசிக்கும் நான், உதயகுமார் சிங்காரவேலு (கடவுச்சீட்டு: A 3951433) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பதாவது 2022.02.09ஆந் திகதியுடன் என்னால் விசேட அற்றோணித் தத்துவப் பத்திரம் மூலம் சிவலிங்கம் இலட்சுமியம்மாளுக்கு (தே.அ.அ.இல.608462473V) வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவப்பத்திரம் இன்று முதல் இரத்துச் செய்யப் பட்டுள்ளது.

உதயகுமார் சிங்காரவேலு.

2023.02.28.

03- 133

## ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிட்டெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எஃப் ஜீ என் டயனா
கணக்கு இல.: 1193 5741 4411.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.06.27ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.09.06ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.08.21ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே எட்டு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து முந்நூற்று எண்பது ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூபா 1,08,49,380.55) 2019, மே 24 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே இரண்டு இலட்சத்து அறுபதாயிரத்து இருநூற்று எழுபத்தைந்து ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூபா 1,02,60,275.64) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 5675 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2023.04.03ஆந் திகதி பி.ப. 2.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குறு கோரலே தெற்கு ராகம் பத்துவின் வத்தளை பிரதேச சபை (உப அலுவலகம் ஹெந்தலை) எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் திம்பிரிகஸ்யாய இல. 170 கிராம அலுவலர் பிரிவின் திம்பிரிகஸ்யாயவில் அமைந்த எல வீதி, வரிமதிப்பீட்டு இல. 70/08A ஐ ஏற்ற "ஹெதவக்ககாஹா குருந்துவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். ஆர். சமரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப் பட்ட 2011, சனவரி 04 ஆந் திகதியிடப்பட்ட (2011, பெப்புருவரி 14 ஆந் திகதி அசல் பிரதி என அத்தாட்சிப்படுத்தப்பட்ட) இல. 5809 எனும் வரைபடத்தில் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 7 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: லொட் 6 ; கிழக்கு : லொட் 5 ; தெற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டீ. ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 2811 எனும் வரைபடத்தின் லொட் 2;மற்றும் மேற்கு : வீதி மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டீ. ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட இல 2226 எனும் வரைபடத்தின் லொட் 3 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் எட்டு தசம் பூச்சியம் இரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 8.02பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5809 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் L 311/01 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்டதன் மீதும் அதன் கீழும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டீ. ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1986, மே 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 2220 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 11 (வீதிக்கான ஒதுக்கம்).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

03- 156

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

எம்.டீ.எஸ். ஏ. சேனாதீர
கணக்கு இல.: 1026 5759 9681.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.11.28ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.10.02ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2020.09.21ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான நான்கு கோடியே நாற்பத்தி நான்கு இலட்சத்து இருபத்தேழாயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தாறு ரூபா எண்பத்தொரு சதம் (ரூபா 44,427,926.81) 2019, நவெம்பர் 07 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நான்கு கோடியே முப்பத்தி மூன்று இலட்சத்து ஆறாயிரத்து முந்நூற்று அறுபத்தி நான்கு ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூபா 4,33,06,364.39) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 513 மற்றும் 515 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான கே. பீ. என். சில்வா என்பவர்கள் மூலமாக 2023.04.27 ஆந் திகதி லொட் இல.01 இன் வரைபட இல.08 ஐ மு.ப.11.00 மணிக்கும், லொட் இல. 21 இன் வரைபட இல. 618 ஐ மு.ப. 11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரளே மெத பத்து சீதாவக்கை பிரதேச சபை எல்லைகளுக்குள், மற்றும் பாதுக்கை பிரதேச செயலாளர் பிரிவின் பாதுக்கை இல. 461 கிராம அலுவலர் பிரிவின் பாதுக்கை கிராமத்தில் அமைந்த, ஹங்வெல்ல வீதி, வரிமதிப்பீட்டு இலக்கங்கள் 28, 28A, 28/2 ஐ ஏற்ற "கெஹெலந்த கும்புர மற்றும் காஹாட்டகாஹாலந்த எனும் காஹாட்டகாஹாவத்த எனும் கொஸ்காஹாலந்த மற்றும் கெலஹேலந்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. ஜீ. ஹேமமாலி என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, சனவரி 07 ஆந் திகதியிடப்பட்ட இல. 8 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: புஸ்வெலி ஓய; கிழக்கு: புஸ்வெலி ஓய, பீ. பத்மபெரும மற்றும் ஏனையோர், டீ. அமரகோன் மற்றும் டபிள்யூ. பத்மபெருமவின் காணி ; தெற்கு: டீ. அமரகோன் மற்றும் ஏ. அமரகோன் மற்றும் டபிள்யூ. பத்மபெருமவின் காணி மற்றும் ஹங்வெல்லை வீதி மற்றும் மேற்கு: மண்டாவய மற்றும் ஏனையோரின் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் மற்றும் முப்பத்தெட்டு தசம் இரண்டு பேர்ச் (1ஏ.0றூ.38.2பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 1 கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :

கூறப்பட்ட பாதுக்கையில் அமைந்த, உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரீ. டீ. ஜே. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1976, மாச்சு 28 ஆந் திகதியிடப்பட்ட இல. 317 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: புஸ்வெலி ஓய; கிழக்கு: ஜீ. பத்மபெருமவின் காணி, ஏ. வீ. சோமதாசவின் காணி மற்றும் எல். எஸ். சேத்தன் சிஞ்ஞோவின் காணி ; தெற்கு: டீ. ஜீ. அமரகோன் என்பவரின் காணி, எல். எஸ். சேத்தன் சிஞ்ஞோவின் காணி மற்றும் பிரதான பெருந்தெரு மற்றும் மேற்கு: கே. டீ. எமலின் நோனாவின் காணி, டீ. டீ. சோமபாலவின் காணி மற்றும் எம். எஸ். பெரேராவின் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் ஒரு றூட் மற்றும் ஒன்பது தசம் ஐந்து பேர்ச் (1ஏ.1றூ.9.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 317 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் A 100/136 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 513 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரளே மெத பத்து சீதாவக்கை பிரதேச சபை எல்லைகளுக்குள், மற்றும் பாதுக்கை பிரதேச செயலாளர் பிரிவின் கலகெதர இல. 452A, கிராம அலுவலர் பிரிவின் கலகெதரையில் அமைந்த, "மீப்பெவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் சேன இத்தமல்கொட என்பவரால் தயாரிக்கப்பட்ட 1977, சனவரி 16 ஆந் திகதியிடப்பட்ட இல. 618 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 21 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இங்கு லொட் 19; கிழக்கு: அகழி ; தெற்கு: இங்கு லொட் 23 மற்றும் மேற்கு: இங்கு லொட் 29 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபது பேர்ச் (0ஏ.0றூ.20பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள்,

பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 618 எனும் வரைபடத்திற்கு அமைவாக அவிஸ்ஸாவலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் A100/103 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட இல. 618 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 29 இன் ஊடாகவும் அதன் கீழும் மேலும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(இல. 515 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

03- 157/2

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எம் ரீ சஞ்சீவனி மற்றும் எஸ் வீ எஸ் பிரியந்த
கணக்கு இல.: 1011 5451 0394.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.08.29ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 25.09.2019 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 25.09.2019 ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே ஐம்பது இலட்சத்து ஆயிரத்து எழுபத்தி ஆறு ரூபா முப்பத்தி ஒன்பது சதம் (ரூபா 1,50,01,076.39) 2019, ஓகத்து 03 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே நாற்பத்தி நான்கு இலட்சத்து எண்பத்தி மூவாயிரத்து எண்ணூற்றி முப்பத்தி ஏழு ரூபா பத்தொன்பது சதம் (ரூபா 1,44,83,837.19) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பன்னிரண்டு தசம் இரண்டு ஐந்து வீதம் (12.25%) விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கம் 1400 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 26.04.2023 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**அட்டவணை**

1. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளே பல்லே பத்துவின் மஹரகமை நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மிரிஹான வடக்கு இல. 523 கிராம அலுவலர் பிரிவின் மிரிஹான கிராமத்தில் அமைந்த சமகி மாவத்தை, வரிமதிப்பிட்டு இல. 06 ஐ ஏற்ற "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஆர். சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, ஏப்பிறல் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 5482 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: சமகி மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 10 ஐ ஏற்ற வளவுகள் ; கிழக்கு: ரஜமாஹா விஹாரை வீதி வரிமதிப்பீட்டு இல. 251 ஐ ஏற்ற வளவுகள் ; தெற்கு: இங்கமைந்த லொட் B மற்றும் ; மேற்கு: சமகி மாவத்தை, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினாறு தசம் நான்கு சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 16.40பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப் பட்ட இல. 5482 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

மேற்கூறப்பட்ட லொட் A கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :

மேற்கூறப்பட்ட மிரிஹான கிராமத்தில் அமைந்த "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். டீ. செனவிரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1987, சனவரி 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 315 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 ஆ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: கூறப்பட்ட இல. 315 எனும் வரைபடத்தின் லொட் 1ஏ ; கிழக்கு: டேவிட் பீரிஸ் இற்கு ஊடான வீதி; தெற்கு: கூறப்பட்ட இல. 315 எனும் வரைபடத்தின் லொட் 1 ஈ மற்றும் ; மேற்கு: இல. 686 எனும் வரைபடத்தின் லொட் 14 மற்றும் சமகி மாவத்தை, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த பதினாறு தசம் நான்கு ஒன்று ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 16.417பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 315 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்தை - நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 204/58 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேற்கூறப்பட்ட மிரிஹான கிராமத்தில் அமைந்த "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் ஏ. ஆர். சில்வா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, ஏப்பிறல் 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 5482 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இங்கமைந்த லொட் A; கிழக்கு: ரஜமாஹா விஹாரை வீதி வரிமதிப்பீட்டு இல. 251 ஐ ஏற்ற வளவுகள்; தெற்கு: ரஜமாஹா விஹாரை வீதி மற்றும் ; மேற்கு: சமகி மாவத்தை, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த பதினாறு தசம் மூன்று சைபர் பேர்ச் (0ஏ. 0றூ. 16.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5482 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

மேற்கூறப்பட்ட லொட் B கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :

மேற்கூறப்பட்ட மிரிஹான கிராமத்தில் அமைந்த "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் எம். டீ. செனவிரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1987, சனவரி 02 ஆந் திகதியிடப்பட்ட இல. 315 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 ඇ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இங்கமைந்த லொட் 1ආ; கிழக்கு: டேவிட் பீரிஸ் இற்கு ஊடான வீதி ; தெற்கு: லொட் 2 (வீதிக்கான ஒதுக்கம்) மற்றும் ; மேற்கு: சமகி மாவத்தை (இல. 686 எனும் வரைபடத்தின் லொட் 14), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினாறு தசம் நான்கு ஒன்று ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 16.417பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 315 எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்தை - நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 204/59 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 686 எனும் வரைபடத்தின் லொட் 14 இன் மீதும் அதன் ஊடாகவும் அதன் கீழும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

03-157/1

## செலான் வங்கி பீஎல்சீ - பொத்துவில் கிளை

பெறுமதிமிக்க காணி ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

பெறுமதிமிக்க காணி ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை

பொத்துவில் -11 இல் வசிக்கும் தீபால் நிரோஸ் சதாநந்த வேறுபெயர் தீபால் நிரோஷ் சதானன்த என்பவர் "கடப்பாடுடையவர்/ ஈடுவைத்தவர் என்ற வகையில் தவணை தவறியுள்ளதால், பிரசித்த நொத்தாரிசு M. K. பெரிநாபராஜா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2013.03.13 ஆந் திகதியிடப்பட்ட 1742 ஆம் இலக்க ஈட்டு முறி, 2013.09.18 ஆந் திகதியிடப்பட்ட 2051 ஆம் இலக்க ஈட்டு முறி, 2015.06.26 ஆந் திகதியிடப்பட்ட 2865 ஆம் இலக்க ஈட்டு முறி 2015.09.15 ஆந் திகதியிடப்பட்ட 2914 ஆம் இலக்க ஈட்டு முறி , 2016.06.28 ஆந் திகதியிடப்பட்ட 3115 ஆம் இலக்க ஈட்டுமுறி ஆகியவை மூலம் செலான் வங்கி பீஎல்சீ யில் அடகு வைக்கப்பட்ட வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்களாதலால், இங்கு கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன் சுற்றுச்சூழலானது, செலான் வங்கி பீஎல்சீயினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டு 2023ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு செலான் வங்கி பீஎல்சீ , இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள கிளைவளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

மேற்படி ஏல விற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கோவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதல்கலுக்கேற்ப நடாத்தப்படும்.

### அட்டவணை

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில், பொத்துவில், பானமபத்து பிரதேச செயலாளர் அலுவலக பிரிவிற்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பி/ 03 கிராம அலுவலர் பிரிவிற்குள், பொத்துவில் 03 இல் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் சீ.ஈ. பிலிப்ஸ் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1952.09.15 ஆந் திகதி 805 ஆம் இலக்க அளவீட்டு திட்டத்தின் படி "பாக்கியவன்ன அல்லது மவுலானா தோட்டம்" என அழைக்கப்படும் விசாலமான காணியின் அளவானது வடக்கிலிருந்து தெற்கு நோக்கி 104 அடி கிழக்கிலிருந்து மேற்காக 52 அடி (வ.தெ. 104 அடி, கி.மே 52 அடி) விசாலமான காணித்துண்டு .

உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். எம். காசிம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.07.01 ஆந் திகதி 5630 ஆம் இலக்க அளவீட்டு திட்டத்தின்படி,

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில், பொத்துவில், பானமபத்து பிரதேச செயலாளர் அலுவலக பிரிவிற்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் பி/ 03 கிராம அலுவலர் பிரிவிற்குள் , பொத்துவில் 03 இல் "பாக்கியவன்ன அல்லது மவுலானா தோட்டம்" என அழைக்கப்படும் விசாலமான காணியின் அளவானது இருபத்து மூன்று தசம் ஒன்று ஒன்று பேர்ச் ( பே.23.11) (0.0585 ஹெக்டயார்) விசாலமான காணித்துண்டு.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.**- வங்கி வளாகத்திலிருந்து அக்கரைப்பற்றுவை நோக்கி 200 மீற்றர் தூரத்தில் இடது பக்கம் உள்ள வட்டிவெலி வீதி வரை சென்று பிறகு அந்த வட்டிவெலி வீதியில் 300 மீற்றர் சென்ற பிறகு இவ் விடயத்துக்கான காணி இடது பக்கம் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2022.06.17 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும், 2022.06.29 ஆந் திகதிய "டெய்லி FT", "அத" மற்றும் 'தமிழன்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம் .**-உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%;
(3) ஏல தாரரின் தரகுப் பணம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்துவதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா2500.00;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 1000.00;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

கொள்முதல் விலையில் மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு , ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற் குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், "பிரதான முகாமையாளர்- (சட்டம் ), செலான் வங்கி பீஎல்சீ , இல. 90, காலி வீதி, கொழும்பு 03." தொலைபேசி இலக்கங்கள்: 011-2456478, 011-2456473 .

மேற்படி ஏலவிற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி இடை நிறுத்துவதற்கு/ இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பீட்டாளர் மற்றும்
உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி : 071-4318252, 011- 2173282.

03-144

---

## செலான் வங்கி பீஎல்சீ - கம்புறுபிடிய கிளை

பெறுமதிமிக்க காணி ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

கம்புறுபிட்டிய வர்த்தகப் பதிவு இலக்கம் மா/5/4613 என்ற இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட "எகோ வென்டிலேட்டர்களஸ்" என்ற கீர்த்தி நாமத்தில் மற்றும் பாணியின் கீழ் ஒரு தனி உரிமையாளராக வியாபாரமாக நடத்திக் கொண்டு இருக்கும் கம்புறுபிடியவில் வசிக்கும் லசித அவந்த லியனபத்திரன என்பவர் கடப்பாடுடையவராகவும்/ ஈடுவைத்தவராகவும் என்ற வகையில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால் வங்கியின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு W.O.S. விதானந்தா என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அனைத்துமான 2016.10.10 ஆந் திகதியிடப்பட்ட 1442 ஆம் இலக்க ஈட்டு முறி, 2016.11.28 ஆந் திகதியிடப்பட்ட 1460 ஆம் இலக்க ஈட்டு முறி, 2017.02.27 ஆந் திகதியிடப்பட்ட 1504 ஆம் இலக்க ஈட்டுமுறி, 2017.07.13 ஆந் திகதியிடப்பட்ட 1544 ஆம் இலக்க ஈட்டுமுறிகள் மீது செலான் வங்கி பீ.எல். சீ. யில் அடகு வைக்கப்பட்ட வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளதால், இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன் சுற்றுச்சூழலானது.

செலான் வங்கி பீஎல்சீயினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டு 2023ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03ஆந் திகதி மு.ப. 11.15 மணிக்கு செலான் வங்கி பீஎல்சீ , இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள செலான் வங்கி வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

மேற்படி ஏல விற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதல்கலுக்கேற்ப நடாத்தப்படும்.

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், கங்கபட பத்துவே, கம்புறுப்பிட்டிய பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதேச சபை எல்லைக்குள், 331 ஏ அகுருகொட கிராம அலுவலர் பிரிவிற்குள், கஹாகல மற்றும் அகுருகொட கிராமத்தில் உள்ள உரிமம் பெற்ற நில அளவையாளர் சி. ரங்கோடகே என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2011.12.24 ஆந் திகதியிடப்பட்ட 577 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படேவத்த லொட் 4 இன் அருகில் லொட் 4ஏ மற்றும் லொட் பி என்று குறிப்பிடப்பட்ட காணி லொட் ஏ என அடையாளமிடப்பட்ட காணி, கட்டடம், மண், மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துடனும் பிரித்து ஒதுக்கப்பட்ட காணியின் அளவு மூன்று றூட் ஆறு தசம் பூச்சியம் எட்டு பேர்ச் (0ஏ.3றூ. 6.08பே.) விஸ்தீரணமான காணி.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி**.- பிரதான பஸ்கள் நிறுத்தும் இடத்தில் இருந்து மாத்தறையை நோக்கி 4.9 கி.மீ. தூரம் சென்ற பிறகு இடது பக்கத்தில் உள்ள கஹகல வீதி வரை சென்று அந்த வீதியில் 250 மீற்றர் வரை சென்ற பிறகு இடது பக்கத்தில் இந்த விடயத்திற்கான காணி அமைந்துள்ளது.

**தீர்மான முடிவு பற்றிய அறிவித்தலுக்கு**.- 2023.01.27 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும், 2023.02.01ஆந் திகதிய "அத", "டெய்லி மிரர்" மற்றும் " தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்** .–உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.–

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%;
(3) ஏல தாரரின் தரகுப் பணம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்துவதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா 3000.00;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள்;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90 வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு , ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற் குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், "பிரதான முகாமையாளர்-(சட்டம் ), செலான் வங்கி பீஎல்சீ , இல. 90, காலி வீதி, கொழும்பு 03." தொலைபேசி இலக்கங்கள்: 011-2456478, 011-2456473 .

மேற்படி ஏலவிற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி இடை நிறுத்துவதற்கு/ இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பீட்டாளர் மற்றும்
உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி : 071-4318252, 011- 2173282.

03-143

---

### செலான் வங்கி பீஎல்சீ - கட்டுநாயக்க கிளை

பெறுமதிமிக்க காணி ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

மண்டாவெலயை வதிவிடமாகக் கொண்ட பிரசன்ன குமார புத்பிட்டிய என்பவர் "கடப்பாடுடையவராகவும்/ ஈடுவைத்தவாராகவும்" என்ற வகையில் பணம் செலுத்தத் தவறியுள்ளார். அதனால் பிரசித்த நொத்தாரிசு T.A.N.N. தென்னகோன் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021.07.22 ஆந் திகதி 2351 ஆம் இலக்க ஈட்டு முறியின் மூலம் செலான் வங்கியில் அடகுவைக்கப்பட்ட கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது.

செலான் வங்கி பீஎல்சீயினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்திற்குட்பட்டு 2023ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு செலான் வங்கி பீஎல்சீ , இல. 90, காலி வீதி, கொழும்பு 03 இல் உள்ள கிளைவளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

மேற்படி ஏல விற்பனையானது சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள கொவிட் 19 நெறிமுறைகளைப் பின்பற்றுவதற்கான கண்டிப்பான வழிகாட்டுதல்கலுக்கேற்ப நடாத்தப்படும்.

### அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், மெதலஸ்ஸ கோரளே, உடபொல தபதெனி ஹத்பத்துவே, பொல்கஹாவெல பிரதேச சபை எல்லைக்குள், பொதுஹெர கிராம அலுவலர் பிரிவிற்குள் மற்றும் பொல்கஹவெல பிரதேச செயலகப்

பிரிவில் பொதுஹெர கிராமத்தில் அமைந்துள்ளதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். பீ. திசாசேகர என்பவரினால் வரையப்பட்ட 2018.03.06 ஆந் திகதியிடப்பட்ட 3753 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஹிடினாவத்த கஹடகஹாமுலஹேன மற்றும் பெலிகஹாமுலஹேன என்று அழைக்கப்படும் காணி லொட் 2 என்று அடையாளமிடப்பட்டு பிரித்து ஒதுக்கப்பட்ட காணித்துண்டின் அளவு ஒரு றூட் மற்றும் இருபது பேர்ச் (0ஏ.1றூ.20பே.) விசாலமான கட்டடம், மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள யாவும் . மேலும் பொது வீதிகளையும் கொண்ட காணி.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.**- பொத்துஹெர சந்தியில் இருந்து கொழும்பு நோக்கி 150 மீற்றர் சென்ற பின் இடது பக்கத்திலுள்ள பன்சல வீதியை அடையலாம். அந்த வீதியில் 350 மீற்றர் வரை சென்ற பிறகு இந்த விடயத்திற்கான காணி வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2023.01.27 ஆந் திகதியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியிலும், 2023.02.03ஆந் திகதிய "டெய்லிFT", "அத", மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்** .-உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.-

(1) கொள்வனவு விலையின் 10%;
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1%;
(3) ஏல தாரரின் தரகுப் பணம் 2.5%;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்துவதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா3000.00;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணங்கள்;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90 வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு , ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற் குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும், "பிரதான முகாமையாளர்- (சட்டம் ), செலான் வங்கி பீஎல்சீ , இல. 90, காலி வீதி, கொழும்பு 03." தொலைபேசி இலக்கங்கள்: 011-2456478, 011-2456473 .

மேற்படி ஏலவிற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி இடை நிறுத்துவதற்கு/ இரத்துச் செய்வதற்கு வங்கிக்கு அதிகாரமுண்டு.

சந்திமா பிரியதர்ஷனீ கமகே,
நீதிமன்ற ஆணையாளர்,
விலைமதிப்பீட்டாளர் மற்றும்
உரிமம் பெற்ற ஏலதாரர்.

இல. 9-i, ஹைலெவல் வீதி,
சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி : 071-4318252, 011- 2173282.

03-145

---

### டிஎப்சீசீ வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பகிரங்க ஏல விற்பனை

1 ஆவது ஏலம்

அவிஸ்ஸாவலை வீதி, கொட்டாவ என்ற இடத்தில் அமைந்துள்ள 1 றூட், 22 பேர்ச் பரப்புள்ள மதிப்பீட்டு இல. 52,54,56, 58 , 60 கொண்ட எரிபொருள் நிரப்பு நிலையம்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவகம் கோறளை பல்லே பத்துவ மஹரகம பிரதேச செயலகத்துக்குட்பட்ட கொட்டாவ நகரம் மற்றும் நகரசபை எல்லைக்குட்பட்ட 496 B கிராம அலுவலர் பிரிவில் அவிஸ்ஸாவலை வீதி, கொட்டாவ என்னுமிடத்தில் அமைந்துள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளர் என். பீ. எல்விட்டிகலவினால் அளந்து வரையப்பட்ட மதிப்பீட்டு இலக்கம் 52, 54, 56, 58, 60 ( 143/2A) யைக் கொண்ட 2008.12.03 ஆந் திகதிய 3149 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் A என்று விபரிக்கப்பட்ட "கொடபொரகஹவத்த" என்று அழைக்கப்படும் காணித்துண்டு முழுவதும்.

டி.எப்.சீ.சீ.வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு எச். எம்.என்.டி.ஆர்.சமரசிங்கவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.09.10 ஆந் திகதிய 44 ஆம் இலக்க அடகுவைத்தற் பிணைக் கட்டுப்பாட்டுக்கான கட்டணத்தையும் பிரசித்த நொத்தாரிசு ஐ.வி.விஜேசிங்கவினால் அளந்து அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019.08.28 ஆந் திகதிய 856 ஆம் இலக்க அடகு வைத்தற் பிணைக் கட்டுப்பாட்டுக்கான கட்டணத்தையும் பொறுப்புதாரியாகிய "ஜே. ஆர்.என்டர்பிரைசஸ்" என்ற பெயரில் வியாபாரத்தை நடாத்திச் செல்பவராகிய ரணசிங்க ஆராச்சிலாகே தொன் ஜனசாந்த ரணசிங்க என்று அழைக்கப்படும் ரணசிங்க ஆராச்சிகே தொன் ஜனசாந்த ரணசிங்க என்பவர் மேற்கொள்ளத் தவறியமையினால் குறித்த வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி மேற்குறித்த ஆதனத்தை எதிர்வரும் 2023.03.30 ஆந் திகதி பி.ப. 3.30 மணிக்கு தலத்திலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளேன்.

**வளாகத்தை அணுகும் முறை**.- கொழும்பிலிருந்து அவிஸ்ஸாவலை வீதி வழியாக (ஹைலெவல் வீதி) கொட்டாவ சந்தி வரையில் சென்று ஹோமாகம நோக்கி மேலும் 150 மீ. சென்றால் குறித்த ஆதனம் வலது புறத்தில் அமைந்துள்ளது.

2 ஆவது ஏலம்

4 ஆம் ஒழுங்கை, பிலியந்தலை வீதி, சித்தமுல்லை, கொட்டாவை என்ற இடத்தில் அமைந்துள்ள 16.75 பேர்ச் பரப்புள்ள பெறுமதிமிக்க குடியிருப்பு ஆதனம்.

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோமாகம பிரதேச செயலகத்துக்குட்பட்ட சித்தமுல்ல கிராம அலுவர் பிரிவில் ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சல்பிட்டி கோரளை உடகஹபற்று சித்தமுல்ல கிராமத்தில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நில அளவையாளர் என்.பீ. எல்விட்டிகல வினால் அளந்து வரையப்பட்ட 2008.10.19 ஆந் திகதிய 3126 ஆம் இலக்க வரைபடத்தில் லொட் 1 என்று விபரிக்கப்பட்ட "தனயங்கொடெல்ல" என்று அழைக்கப்படும் காணித்துண்டு முழுவதும்.

டி.எப்.சீ.சீ.வங்கி பீஎல்சீ சார்பில் பிரசித்த நொத்தாரிசு கே. சுரவீர வினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.09.22 ஆந் திகதிய 1446 ஆம் இலக்க அடகு வைத்தற் பிணைக் கட்டுப்பாட்டுக்கான கட்டணத்தையும் பொறுப்புதாரியாகிய "ஜே. ஆர்.என்டர்பிரைசஸ்" என்ற பெயரில் வியாபாரத்தை நடாத்திச் செல்பவராகிய ரணசிங்க ஆராச்சிகே தொன் ஜனசாந்த ரணசிங்க என்று அழைக்கப்படும் ரணசிங்க ஆராச்சிகே தொன் ஜனசாந்த ரணசிங்க என்பவர் மேற்கொள்ளத் தவறியமையினால், குறித்த வங்கியால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி மேற்குறித்த ஆதனத்தை எதிர்வரும் 2023.03.30 ஆந் திகதி பி.ப. 3.45 மணிக்கு ஸ்தலத்திலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யவுள்ளேன்.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2022.11.25 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2022.10.31 ஆந் திகதிய "டெய்லி திவயின", "த ஐலண்ட்" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**வளாகத்தை அணுகும் முறை**.- கொட்டாவ நகரத்திலிருந்து ஹொரண வீதி வழியாக பின்ஹேன சந்தி வரையில் சுமார் 1 கி.மீ. வரையில் சென்று வலது பக்கம் பிலியந்தலை வீதிக்குத் திரும்ப வேண்டும். அங்கிருந்து சிகுராதா பொல சந்தி வரையில் 850 மீற்றர் இடது பக்கம் திரும்பி 1.6 கி.மீ. சென்று வலது பக்கம் 4 ஆவது ஒழுங்கைக்குத் திரும்பினால் குறிப்பிட்ட ஆதனம் இடது பக்கத்தில் அமைந்துள்ளது. (லொட் 1).

**கட்டணங்கள் செலுத்தும்முறை** .-கொள்வனவு செய்யும் நாட்டமுள்ளவர் ஏலம் முடிவுறுத்தப்படும் தருணத்தில் பின்வரும் முறையில் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்:

(1) 10% கொள்வனவு விலையில் ;
(2) 1 % உள்ளூரதிகாரச் சபைக் கட்டணம்;
(3) 2 1/2 % ஏலமிடுவதற்கான கட்டணம் மற்றும் தரகுப் பணத்துக்கு ஏற்புடைய வரிகள்;
(4) விளம்பரப்படுத்துவதற்கான மொத்தக் கட்டணம் ;
(5) இலிகிதர் மற்றும் அறைகூவல்காரருக்கான கட்டணம் ரூபா 1,500.00 ;

விற்பனையின் நிபந்தனைகளை அத்தாட்சிப் படுத்தியமைக்கான நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை சான்றிதழின் முத்திரைக் கட்டணமம் ரூபா 3,000.00 முதலியன எஞ்சிய 90% கட்டணமானது ஏலமிட்ட நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**ஆதன இடாப்புகள் மற்றும் ஏனைய ஆவணங்களைப் பரிசீலிக்க** : மீட்டெடுத்தலுக்கான தொடர்பாடல் முகாமையாளர், டீ.எப்.சீ.சீ. வங்கி பீஎல்சீ , இல. 73, வி. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2. தொலைபேசி:011-2371371.

பி.கே.ஈ. சேனாபதி,
நீதிமன்ற ஆணையாளர்,
விலை மதிப்பீட்டாளர்,
பட்டய ஏலமிடுபவர்.

இல. 134, பெத்தகான வீதி, கோட்டை.
தொலைபேசி இல.: 011-2873656, 0777-672082, தொலைநகல்: 011-2871184.

03- 106

---

## டீ.எப்.சீ. சீ. வங்கி பீஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை

அடமானம் வைத்தோர் என்ற வகையில் நொத்தாரிசு கே. டீ. ஏ. சீ.அபேசேகர, சி. பி. டபிள்யூ. மீகஹாவெல, என். எஸ். ரனதுங்க என்பவர்களினால் 2015.02.25, 2015.03.04 மற்றும் 2015.03.11 ஆந் திகதியிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட அடமானப் பத்திர இலக்கங்கள் 7313/ 944/ 968, நொத்தாரிசு கே. டீ.ஏ.சீ. அபேசேகர, 2017.07.06 ஆந் திகதியிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட அடமானப் பத்திர இல. 8608, நொத்தாரிசு கே.டீ.ஏ.சீ. அபேசேகர 2019.01.02ஆந் திகதியிடப்பட்டு உறுதிப் படுத்தப்பட்ட அடமானப் பத்திர இல. 9273 மற்றும் 9275 (டீ.எப்.சீ.சீ. வர்தன வங்கி பீஎல்சீ யில் வைப்பிலிட்டது) திரும்பச் செலுத்தத் தவறிய பலபத்வெல பதிவு அலுவல கத்தில் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு கம்பனிச் சட்டத்திற்கமைய பதிவு இல.பீவீ11641, நந்தசிறி ஹாட்வெயார் (பிரைவட்) லிமிட்டட் என்ற நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக டீ.எப். சீ.சீ. வங்கி பீஎல்சீயில் ஈடு வைக்கப்பட்ட சொத்து.

*மத்திய மாகாணம், மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் பலபத்வெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாத்தளை தெற்கு கம்பஹா சிய பட்டுவ கிரிகல்பொட்ட கிராம அலுவலர் பிரிவு உடுகமவில் அமைந்துள்ள ஹொனதுவேவத்த மற்றும் ஹொனதுவேயாய அல்லது ஹொலுவெல்லஹென என்று அழைக்கப்படுகின்ற காணி அனுமதிபெற்ற நில அளவையாளர் ஈ.வீ. சிறிசுமன என்பவரினால் 2000.03.26 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக் கப்பட்ட நிலவரைபட இல.1158 துண்டு 1 சகலதும் பிரிக் கப்பட்டு குறிப்பிடப்பட்டு மூன்று ஏக்கர் பதினைந்து தசம் ஐந்து பேர்ச் (3ஏ.0றூ.15.5பே.) அல்லது 1.254 ஹெக்டயார் விஸ்தீரணத்தை நில வரைபட இல. 1158 துண்டு 1 கொண்டுள்ளது.*

**மேலே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை 2023, மார்ச்சு 30 ஆந் திகதி மு.ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.**

**செல்லும் வழி**- *மாத்தறை நுஹகஹா பஸ் தரிப்பு நிலையத் திலிருந்து தம்புள்ள வீதியால் சுமார் 4.1 கி.மீ. தூரம் சென்றால் குறிக்கப்பட்ட காணி வலது பக்கத்தில் 31 கி.மீ. போஸ்ட் உள்ளது. அதை கடந்து 40 மீ. தூரத்தில் நந்தசிறி ஹாட்வெயார் (பிரைவட்) லிமிட்டட் என்ற நிறுவனம் முன்னிலையில் அமைந்திருக்கும்.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்காக.***-*2022.08.05 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2022.06.17 ஆந் திகதிய " டெய்லி திவயின" , "த ஐலண்ட்" ஆகிய பத்திரிகைகளையும் மற்றும் 2022.06.20 ஆந் திகதிய "தினக்குரல்" ஆகிய பத்திரிகை யையும் பார்க்கவும்.*

***கட்டணம் செலுத்தும் விதம்.***- *வெற்றிகரமான கொள்வ னவாளர் ஏல விற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளை பணமாகச் செலுத்த வேண்டும் :*

*(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% ;*

*(2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி ஒரு வீதம் (1%) ;*

*(3) ஏல விற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%);*

*(4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 3,000.00 ரூபா;*

*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 2000.00 ரூபா;*

*(6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு.*

*கொள்வனவு விலையின் மிகுதி 90 % மற்றும் இலங்கை அரசினால் விதிக்கப்பட்ட சட்டபூர்வ கட்டணங்கள், கடமைகள், வரிகள் அல்லது கட்டணங்கள் விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வைப்புச் செய்தல் வேண்டும்.*

*மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன் வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.*

*மேலும் விபரங்களுக்கு தயவு செய்து மறுவாழ்வு மீட்பு துறையுடன் தொடர்பு கொள்ளவும். "டீஎப்சீசீ வங்கி பீஎல்சீ, இல.73, டபிள்யூ. ஏ.டீ. ராமநாயக்க மாவத்தை, கொழும்பு 2." எனும் விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 2371371.*

*"மேற்படி ஏல விற்பனையை வங்கியினால் முன்னறி வித்தலின்றி இரத்துச் செய்யவும் இடைநிறுத்தவும் முடியும்."*

*துசித கருணாரத்ன (ச. நீ.),*
*உத்தரவுபெற்ற ஏலதாரர் மற்றும்*
*நீதிமன்ற ஆணையாளர்.*

*ரி அன்ட் எச் ஒக்சன்,*
*இல. 50/3, விஹார மாவத்தை,*
*கொலன்னாவ,*
*தொலைபேசி இல. : 011-3068185, 011- 2572940*

*03- 152*